சென்று படிப்பதற்கு முடியவில்லை. ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனையோ நன்மைகளை அரசு செய்து அவை நடந்து கொண்டிருக்கின்றன, அப்படியிருக்கிறபோது இதையும் அரசு உத்தேசித்து அங்கே அவர்களுக்கு தனியாக வாசக சாலை ஒன்றை அமைத்துத் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம் வெம்பக்கோட்டை ஒன்றியம் தாயில்பட்டி கிராமத்திலே உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு தனியாக வாசகசாலை கட்டவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே பொது நூலகம் ஒன்று நூலக ஆணைக் குழுவின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கிறது. தாயில்பட்டி கிராமத்தில் 5347 மக்கள் இருக்கிறார்கள். அதிலே ஆதிதிராவிடர்கள் 502 பேர்தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கென்று தனியாக நூல்நிலையம் கட்டுவதற்கு எந்தவிதமான செலவும் செய்ய நிதி ஒதுக்கப்படவில்லை. அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே ஆதிதிராவிட மக்களுக்கென்று தனியாக ஒரு பழைய கட்டடம் இருந்தது. அதை இடித்துவிட்டு யூனிசெப் மூலமாக ஒரு வாசக சாலை கட்டித்தருவதாக சொல்லப்பட்டது. அதையாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் தலையிட்டு அவர்களுக்காகக் கட்டித்தருவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரையில் தனியாக நூலகங்கள் கட்டிக் கொடுப்பதற்குத் திட்டங்கள் இல்லை. அப்படி இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருப்பதைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கையை அரசு எடுக்கும்.

பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் குடிநீர் பராமரிப்புக்கு ஆண்டுச் செலவு.

76—(*வினா எண் 9368) டாக்டர் கே. பி. இராமலிங்கம் மற்றும் திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் 1982-83, 1983-84 மற்றும் 1984-85-ம் ஆண்டுகளில் குடிநீர்த் திட்டப் பராமரிப்புக்கென ஆண்டுக்கு ரூ. 40,000 செலவிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், குறிப்பாக என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டன ?

1986 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பாப்பாக்குடி ஒன்றியம் வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் 1982-83, 1983-84 மற்றும் 1984-85-ம் ஆண்டுகளில் குடிநீர்த் திட்ட பராமரிப்புக்கென ஆண்டுக்கு ரூ. 40,000 செலவிடப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை பேருந்து நிலையம்.

77—(*வினா எண் 9515) **திரு. ஆ. நடராசன் மற்றும் திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை நகரில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டத்துடன் பயணிகள் தங்கும் விடுதியும் இணைக்கப்படுமா ?

(இ) இதன் மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) பணி எப்போது தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) (இ) மற்றும் (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சைத் திருநகரில் இப்போது அமைந்துள்ள பேருந்து நிலையம் மிகக் குறுகிய இடத்தில் இருப்பதால் பக்கத்திலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையமும் இருப்பதால் அங்கே வந்துபோகிற பேருந்துகளுக்கும் மக்களுக்கும் வசதிகள் இல்லாத காரணத்தினால் பேருந்துகள் வந்து போகமுடியாத நிலை இருக்கிறது. அதை ஆலோசித்து இப்போதுள்ள நகரப் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்திலே உள்ள இடங்களை அப்புறப்படுத்தி அங்கே பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த முன்னதாகவே ஒரு திட்டம் இருந்ததே அதைப் பரிசீலனை செய்து அந்த நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற குறிப்பு என்னிடத்தில் இல்லை. தகவல் கேட்டு மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கிறேன்.